## திருக்கேதீச்சரத்துக் கௌரிநாயகி பிள்ளைத்தமிழ்
## சி. இ. சதாசிவம்பிள்ளை அவர்கள் இயற்றியது.

### Source:

திருக்கேதீச்சரத்துக் கௌரிநாயகி பிள்ளைத்தமிழ்
சி. இ. சதாசிவம்பிள்ளை அவர்கள் இயற்றியது.
வெளியீடு :'பழைய மாணவர் குழு' புங்குடுதீவு.
பதிப்பகம்: யாழ். விவேகானந்தா அச்சகம்
முதற்பதிப்பு: 1976 , விலை ரூபா 5-00
உரிமை ஆசிரியருக்கே
Published by Vidwan S. Arumugam

On behalf of The Old Students of Perasiriyar S.E. Sathasivam Pillai. Pungudutivu.

அச்சுப்பதிப்பு : விவேகானந்தா அச்சகம், யாழ்ப்பாணம்

---------

உ

சிவமயம்

**அணிந்துரை - வெண்பா**
தொண்டர் தொழுதேத்தத் தூய அருள்பொழியும்
அண்டர் புகழ்கௌரி அம்மைபால் - மண்டுமன்பைப்
பிள்ளைத் தமிழ்செய்த பெம்மான் சதாசிவ
வள்ளல்சீர் வாழ்க வளர்ந்து.

"மூவுலக மும்புகழு மாதோட்ட தலமகிமை
    மொழிவதரி தென்றுசூதன்
முதனூலின் மும்முறை முழங்கினான்"
    (முதனூல் தக்ஷிண கைலாச மான்மியம்)
"அமலர்கே தீச்சரந் திருஞானசம்பந்த
    ராரூரர் திருவாய்மலர்ந்
தருள் செய்தே வாரம் பெறுந்தலம தாகலி
    னதற்குநிக ரார்சொலவலார் "
(ஈழமண்டல சதகம், ஆசிரியர் ம.க.வே. இயற்றியது.)

திருக்கேதீச்சர தல விசேடத்தால் இந்நூற்றாண்டில், கிடைத்தற்கரிய இருபெரும் புதையல்கள் - மரபு பிறழாதவைகள் - நமக்குக் கிடைத்திருக்கின்றன. ஒன்று திருக்கேதீச்சர புராணம். மற்றையது கௌரி நாயகிபிள்ளைத்தமிழ். இரண்டும் ஆலய சந்நிதானத்தில் பாராயணம் பண்ணத்தக்க புனிதம் வாய்ந்தவைகள். புராணமகிமை பற்றி அதன் முகவுரையிற் காணலாம். புராண ஆசிரியரும், பிள்ளைத்தமிழ் ஆசிரியரும் அறிவுத்தூய்மையாலும், ஒழுக்க சீலங்களாலும் பிரசித்தமானவர்களாயினும் தம்மை வெளிக்காட்டாதவர்கள். அதனால் அவர்களின் கவித்துவ சாமர்த்தியம் குடத்துள் விளக்காய் இருந்தது.

பிள்ளைத்தமிழ் ஆசிரியரின் கவித்துவம் தூதுப் பிரபந்தமொன்றினால் சற்றே வெளிப்பட்டிருந்தாலும், முழுமையான ஆற்றல் பிள்ளைத்தமிழிலே தான் தலை நிமிர்ந்து நிற்கின்றது. பிள்ளைத்தமிழின் சிகரமான மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழின் அடிச்சுவட்டைக் காட்டி இதற்கு நல்லதொரு விமரிசனம் காணலாம்.

நாவலர் பெருமான் மனங்குளிரும்படி, காரைநகர், அருணாசலப்பெருந்தகை ஈன்ற சைவாசிரியருள் தலைமைப் புதல்வர் நம் பிள்ளைத்தமிழ் ஆசிரியர். சக ஆசிரியரெல்லாம் தம் ஆசிரியரென்று மதித்தலால், அவர் பேராசிரியர். பேராசிரியர் சி. இ. சதாசிவம்பிள்ளை அவர்கள், கௌரி அம்மைபால் ஊற்றெடுத்த அன்பைக் குழைத்துப் பிள்ளைத்தமிழ் செய்து, அதனை நமக்கெல்லாம் வாரிவழங்கி வள்ளன்மை செய்திருக்கின்றார்கள்.

அவர்களின் வள்ளன்மைச் சிறப்பு வளர்ந்து வாழ்வதாக.

பிள்ளை அவர்களின் கண்காண, பிள்ளைத்தமிழ் அச்சு வாகனமேறி, தேவி சந்நிதியில் அரங்கேறுவதும் நிகழ்வது கிடைத்தற்கரியதொரு பேறு. பிள்ளை அவர்களின் தவப்பேறு இருந்தவாறு !

கலாசாலை வீதி, சி. கணபதிப்பிள்ளை

திருநெல்வேலி,

23-3-76.

---------------------------------------

## பதிப்புரை

இலங்கையில் வாழ்கின்ற இந்து மக்களின் உயிரனைய திருத்தலம் திருக்கேதீச்சரம். பல்லாண்டுகாலமாக மறைந்து கிடந்த இத்தலத்தினை மீண்டும் வெளிப்படுத்த வல்லவர் எவரோ என்று ஏங்கியிரங்கி அழுது மறைந்தவர் நாவலர் பெருமான். நாவலர்பெருமானின் கனவு நனவாகிவிட்டது. "கேடில்லாத கேதீச்சரம்", “தொண்டர் நாடொறுந் துதிசெய அருள் செய் கேதீச்சரம்" ஆகிவிட்டது.

இத்திருத்தலத்தில் எழுந்தருளியிருக்கும் கேதீச்சரநாதர் மீது பத்தி மிகுந்து கிள்ளைவிடு தூது பாடிப் போற்றியவர் புங்குடுதீவைத் தாயகமாகக்கொண்ட பேராசிரியர் சி. இ. சதாசிவம் பிள்ளை அவர்கள். இவரை இளையப்பா உபாத்தியாயர் என்றே எல்லோரும் இனிதாக அழைப்பர். இவர் எங்கள் குருதேவர்; ஆசிரியர் குல தீபம்; எம் கண்கண்ட தெய்வம்.

பேராசிரியர் பழுத்த மனத்திருத்தொண்டர்; பத்திநெறி கைவந்த பண்பு மிகுசெல்வர்; சிறந்த கவிஞர், இவர் பழந்தமிழ் நூல்களில் பரந்த அறிவு படைத்தவர்; தோத்திர நூல்களிலும் சாத்திர நூல்களிலும் ஈடுபாடு மிகவுமுடையவர். கௌரிநாயகி மீது கொண்ட கரைகடந்த பத்தியினாலே திருக்கேதீச்சரத்துக் கௌரிநாயகி பிள்ளைத்தமிழ்ப் பிரபந்தம் ஒன்றும் பாடி முடித்துள்ளார். இவருடைய மாணவருட் சிலரும்; நண்பர்களும், அன்பர்களும் நூலைப் படித்துச் சுவைத்தனராயினும் அதனை அச்சேற்றும் வாய்ப்பு எளிதிற் கிட்டவில்லை, இவ்வாண்டில் எல்லாம் வல்ல இறைவியின் திருவருளால் நூலும் அச்சாகி விட்டது. குருதேவரின் பழைய மாணவர்களும், நண்பர்களும் பொருளுதவி புரிந்தமையினால் நூல் பொலிவுடன் வெளிவருகிறது.

இந்நூல் வெளிவருதற்குப் பொருளுதவி புரிந்த பேரன்பர்களுக்கு முதலில் யான் உளங்கலந்த நன்றியையும் வணக்கத்தையும் தெரிவித்துக் கொள்கின்றேன். அடுத்து நூலுக்கு அணிந்துரை வழங்கிய செந்தமிழ் முனிவர் பண்டிதமணி, சி. கணபதிப்பிள்ளை அவர்களுக்கும், நூலினை நன்கு சுவைத்து மதித்து முகவுரை வழங்கிய இலங்கைப் பல்கலைக் கழக யாழ்ப்பாண வளாகத் தலைவர் அறிஞர். உயர்திரு. க. கைலாசபதி M A. M. Lit-Phd. அவர்களுக்கும் பேராசிரியரின் வாழ்வும் வளமும் குறித்துக் கட்டுரை வழங்கிய பண்டிதர் மு. ஆறுமுகனார் - அவர்களுக்கும் நூலுள் நுழைந்து சுவைத்து

ஆராய்ச்சியுரை வழங்கிய அன்பர் வித்துவான் பொன். அ. கனகசபை அவர்களுக்கும் எம் உளங்கனிந்த நன்றியும் வணக்கமும் உரியவாக.

இந்நூலினை அச்சிடுங்கால் திருப்பாடல்களை எழுத்தெழுத்தாகவும், சொல்சொல்லாகவும், சீர்சீராகவும் படித்துப் படித்துச் சுவைக்கும் பேறு தமியேனுக்குக் கிடைத்தது. கெளரிநாயகியின் புகழ் விரிக்கும் இந்நூலினைப் படித்தவண்ணமே இருக்கின்றேன். நூலாசிரியராகிய பேராசிரியர் மீது யான் கொண்டுள்ள அன்பின் பரிசு அது. நூல் முழுவதையும் ஒருமுறையேனும் படித்துச் சுவைப்பவர், இந்நூலினை அபிராமி அந்தாதி போல் ஆராதனை நூலாக அமைத்துக் கொள்வர் என்பது என் பணிவான கருத்து. இலக்கியச்சுவை கருதிப் படிப்போருக்கும் இந்நூல் நல்விருந்து அளிக்கும் என்பதில் எட்டுணையும் ஐயமில்லை.

இந்நூல் சிறப்புடன் வெளிவர உறுதுணையாக விளங்கிய நண்பர் வித்துவான் பொன். அ. கனகசபை அவர்களுக்கும், பேரன்பர் க. சிவராமலிங்கம் B. A. அவர்களுக்கும், நூலினை விரைவில் அச்சிட்டு உதவிய யாழ். விவேகானந்த அச்சக அதிபர், துணையதிபர், இலிகிதர், தொழில்புரி நிபுணர் அனைவருக்கும் எம் மனமார்ந்த நன்றி.

பத்திச் சுவை கனிந்த இத்தெய்வீக நூலினை அச்சேற்றும் வாய்ப்பு, எனக்குக் கிடைத்த பெரும்பேறு. அவ்வாய்ப்பினை யன்புடனளித்த குருதேவர் பேராசிரியர் உயர்திரு. சி. இ. சதாசிவம்பிள்ளையவர்களின் பொன்னார் திருவடிகளுக்கு என் வணக்கம் என்றும் உரித்து.

"தமிழகம்" சி. ஆறுமுகம்

புங்குடுதீவு-12 "பதிப்பாசிரியர்" , (பழைய மாணவர் குழு)

5-3-76

-----------------------------------

## முகவுரை

தமிழிலே தொண்ணூற்றாறு வகைப் பிரபந்தங்கள் உண்டென்பர். பிரபந்த இலக்கணம் வகுக்கப்பட்ட பின் எழுந்த சில வகைகளும் வழங்கி வந்துள்ளன. இப்பிரபந்தங்கள் அனைத்தும் "தமிழ்கூறு நல்லுலகத்திற்குப்" பொதுவானவை யெனினும், பலகாலமாக ஈழதேசத்திற் செய்யுள் இயற்றி வந்த புலவோர்கள் ஏறத்தாழ நாற்பது வகைப்

பிரபந்தங்களைப் பாடியிருக்கின்றனர். ஈழத்துத் தமிழியல் பற்றிய ஆர்வமும், ஆய்வும் வளர்ச்சியுற்று வரும் இந்நாட்களில், ஈழத்துப் புலவர்கள் பாடியனவாக இதுவரை அறியப்படாத பிரபந்த வகைகள் இனிமேல் தெரிய வரவுங்கூடும்.

ஏறத்தாழ நாற்பது பிரபந்த வகைகள் ஈழத்தவராற் பாடப்பெற்றிருப்பினும் அவற்றுள்ளும் சிலவே பெரிதும் சிறப்பாகக் கையாளப்பட்டன; அந்தாதி, ஊஞ்சல், கீர்த்தனை, குறவஞ்சி, கோவை, தூது, பள்ளு, புராணம், மான்மியம், விருத்தம், வெண்பா என்பன நந்தேசத்துப் புலவர்கள் நாவில் நன்கு பயின்றவை. ஊஞ்சல், பள்ளு, புராணம் முதலியவற்றிலே ஈழத்து இயற்கைச்சூழல் குறிப்பிடத்தக்க பாங்கில் இடம் பெற்றிருக்கிறது. இயற்கை வருணனை, மக்கள் வாழ்க்கை முறை, ஒழுகலாறு முதலியவற்றை நுணுக்கமாய்ச் சித்திரிப்பதற்குச் சிற்சில இலக்கிய வடிவங்களின் உருவமைப்பு வாய்ப்பாக உள்ளது.

ஈழத்து எழுந்த பிரபந்தங்களுள், சமயத்தொடர்புடைய தலங்கள் பலவற்றின் பெருமையைப் பாடுவனவற்றிற்குத் தனியிடமுண்டு. தலபுராணங்கள் மட்டுமன்றிச் சிறிய உருவளவில் அமைந்த ஊஞ்சற் பாடல்கள் கூடத் தலங்களின் அருமை பெருமைகளைப் பேசுவதிற் சிறந்து விளங்குகின்றன. உண்மையில், பத்தொன்பதாம் நூற்றாண்டிலும் இந்நூற்றாண்டின் முதற்காலிலும் ஊஞ்சற் பாடலைக் கையாளாத ஈழத்துப் புலவரே இல்லையென்று கூறுதல் மிகையாகாது. இப்பிரபந்தங்களில் இடம் பெற்ற தலக்காட்சிகள், பிரதேச வருணனைகள், ஊர் உணர்வுகள் முதலியவற்றினடியாகவே, காலப்போக்கில் தேசிய இலக்கிய மரபு ஒன்று இந்நாட்டிலே பரிணமித்துள்ளது என்று கூறலாம்.

திருகோணமலைக்கு அண்மையில் உள்ள கரைசை என்னும் தலத்தின் வரலாற்றையும் மகிமையையும் விவரிக்கும் திருக்கரைசைப் புராணம், காலிக் கதிரேசர் ஊஞ்சல், பாணந்துறைக் கந்தரந்தாதி, மாத்தளை முத்துமாரியம்மன் குறவஞ்சி, கதிரமலைக் கந்தவேள் பதிகமும், தேவபாணியும், முன்னைநாத சுவாமி நவதுதி முதலிய பிரபந்தங்களை அங்கொன்று இங்கொன்றான முறையில் நோக்குவோர்க்கும், நாட்டின் பற்பல பகுதிகளும், பதிகளும் நமது கவிஞர்களின் கவனத்துக்குட்பட்டமை தெளிவாகும். ஒருகாலத்தில் நம்மவர் புலம்பெயர்ந்து சென்று பெருந்தொகையினராய் வாழ்ந்த மலாயா நாட்டிலுள்ள கோயில்கள் மீது சிலர் பிரபந்தங்கள் யாத்துள்ளனர்.

உதாரணமாக, குவாலாலம்பூர் சிவபெருமான் ஊஞ்சல், ஈப்போ தண்ணீர்மலை வடிவேலர் மும்மணிக்கோவை என்பனவற்றைக் காட்டலாம்.

ஈழத்துக்கே சிறப்பாகவுரிய சைவசமயத் தலங்கள் நூற்றுக்கு மேற்பட்டவை இருப்பினும், சமயகுரவர்களாகிய சம்பந்தரும் சுந்தரரும் போற்றிப் பாடிய கோணேஸ் வரம், கேதீச்சரம் ஆகியன தனிச்சிறப்பு வாய்ந்தவை. இவ்விரு தலங்கள் மீதும் கதிரமலைமீதும் பிற்காலத்து அன்பர்கள் பாடிய பனுவல்கள் அனந்தம். இந்நூலாசிரியரும் திருக்கேதீச்சரநாதர்மீது பாமாலை தொடுத்த பக்தர்களில் ஒருவர். ஏலவே, திருக்கேதீச்சரநாதர் கிள்ளைவிடுதூது என்னும் நூலைப் பாடியுள்ளார். அது சிவநேயச் செல்வர்களின் சிந்தையைக் கவர்ந்துள்ளது.

மரபுவழித் தமிழ்க்கவிதை வலிகுன்றி அருகிவரும் இக்காலத்திலே இலக்கிய இலக்கண மரபு பிறழாது இயற்றப்பட்ட பிள்ளைத்தமிழ்ப் பிரபந்தம் ஒன்று வெளியிடப் படுவதே விதந்துரைக்க வேண்டிய விசேட நிகழ்ச்சியாகும். கூர்ந்து பார்க்கின், சீரிய நூல்களை இயற்றுவோரது வாழ்க்கைமுறைக்கும், அவர்தம் நூல்களின் பண்புகளுக்கும் நெருங்கிய தொடர்பிருத்தல் புலனாகும். கேள்விஞானமும் இறையுணர்வும் வாய்க்கப்பெற்று, மரபுவழிப் பிரபந்தங்களை யாக்கும் புலவர்கள் ஆன்றவிந்தடங்கிய சான்றோராயுமிருத்தல் ஆங்காங்குக் காணக்கூடியவொன்றாகும். சுன்னாகம் குமாரசாமிப்புலவர் மாணாக்கரான சி. இ. சதாசிவம் பிள்ளையவர்கள், மதிப்புக்குரிய மரபொன்றின் வாரிசுகளில் ஒருவராய் நம்மிடையே வாழ்ந்து வருபவர். நூல்களை நுனித்துக் கற்றலும், கசடறக் கற்பித்தலுமே உயர் இலட்சியங்கள் எனக்கொண்டு வாழ்ந்து வந்திருக்கும் பிள்ளையவர்கள், பல வழிகளிலும் நமது மதிப்பிற்குரியவரே. அவரது வாழ்க்கையும் எழுத்தும் இசைபட இயங்கி வந்துள்ளன.

முன்னர் வெளிவந்த தூதுப் பிரபந்தத்திற் காணப்பட்ட சிற்சில அம்சங்கள் இந்நூலிலே விரிவுபெற்றுள்ளன. உதாரணமாக, தூது நூலிலே கேதீச்சரத்துக்குப் போகும் வழியிலே பாதையருகில் வீற்றிருக்கும் முறிகண்டிப்பிள்ளையாரை வணங்கி ஏகுமாறு கிள்ளையைப் பணிக்கும் புலவரவர்கள், பிள்ளைத் தமிழிலே காப்புப் பருவத்தில் குழந்தையைக் காக்குமாறு முறிகண்டி விநாயகரை வேண்டுகின்றார். முறிகண்டி, பாலாவிக்கரை, கேதீச்சரம் இவற்றின் வருணனைகள் நூலுக்கு அணி செய்கின்றன. பிற்காலத்து மரபுவழித் தமிழ்ச் செய்யுள் பலவற்றிற் காணப்படும் வரட்சி, சுவையற்ற சொல்லலங்காரம், உணர்ச்சியின்மை முதலிய குறைபாடுகளின்றி, பாடும் பொருளோடு

'தான் கலந்து' பாடும் தன்மை பிள்ளையவர்களிடத்துக் காணப்படுதல் கவனிக்கத்தக்கதாகும்.

புதுமைக் கவிதைகளாகக் கொள்ளப்படுவனவற்றின் சிறப்பியல்களில் ஒன்று, அவை முன்னோர் மொழி முறைகளிலிருந்து வேறுபட்டு நிற்றலாகும். அவ்வியல்பு தற் புதுமையின் பாற்படுவதாகும். மரபுவழித் தமிழ்க்கவிதையின் உயிர் நாடியே, அது பழந்தமிழ்ச் செய்யுட்களின் சான்றாக அமைந்திருத்தலாகும். சதாசிவம் பிள்ளையவர் களின் பிரபந்தத்திலே தேவார திருவாசகங்களின் சாயல் மட்டுமன்றிப் புராண நூல்கள், பிற்காலத்துப் பிள்ளைத்தமிழ் நூல்கள் முதலியவற்றின் செல்வாக்கும் காணப்படுதல் குறிப்பிடத்தக்கதே. வருகைப் பருவத்திலும் அம்மானைப் பருவத்திலும் ஆசிரியரின் கவித்துவம் ஆற்றலுடன் செயற்படுவதைக் கண்டு களிக்கலாம்; சிலவிடங்களிலே குமர குருபர சுவாமிகளது மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழின் நினைவு வராமற் போகாது.

பழந்தமிழ்ப் பனுவல்களின் பாரம்பரியச் சுவையும், இராவணன், மண்டோதரி ஆகியோர் பற்றிய ஐதிகங்களும் தலங்களின் மண் வாசனையும் சேர்ந்து கலந்து கவிதைக் குக் கவின் செய்கின்றன. புலவரவர்களின் புலமைக்கும் பக்திக்கும் காட்டாக மிளிரும் இந்நூல். இலக்கிய இரசிகர்களுக்கு இன் விருந்தாகவும் இலங்குகின்றது. ஈழத்துத் தமிழ்ப் பக்தியிலக்கியத்துக்கு இப்பிரபந்தம் பெருமைப் படத்தக்க பங்களிப்பாகும்.

யாழ்ப்பாண வளாகம், க. கைலாசபதி

திருநெல்வேலி, 76-4-1

------------------------------------------

உ

திருச்சிற்றம்பலம்

## நூன்முகம்

ஈழமண்டலத்திலே தேவாரப்பாடல் பெற்ற சிவஸ்தலங்கள் இரண்டு. ஒன்று திருக்கேதீச்சரம். மற்றொன்று கோணமாமலை என்னும் திரிகோணமலை.

திருக்கேதீச்சரத்திற்கு திருஞானசம்பந்த சுவாமிகள் சுந்தரமூர்த்தி சுவாமிகள் ஆகிய இருவரது பதிகங்கள் உண்டு. மறைந்திருந்து மறுமலர்ச்சி பெற்றுவரும் திருக்கேதீஸ்வரத் துக்கு வழிபாட்டிற்கெனச் சென்றிருந்த சமயம் அங்குத் திருப்பணிச்சபைத் தலைவராய் இருந்த சிவமணி சேர். கந்தையா வைத்தியநாதன் அவர்கள் அடியேனிடம் இத்தலத்தைப் பற்றி ஏதாவது பாடும்படி பணித்தார்கள்.

நம் சமயாசாரியர் மேற்கொண்ட "பாடல் நெறி"யைப் பின்பற்றி நம் திருக்கோயில்களுக்குப் பல பிரபந்தங்கள் தோன்றல் வேண்டும் என்னும் கருத்துடையேனாதலாற் கிடைத்த ஆணையை மேற்கொண்டு எனது அறிவின் சிறுமையையும் பக்திப் பேறின்மையையும் நோக்காது திருவருள் துணைகொண்டு பாடமுற்பட்டேன்.

எம்பெருமான் மீது பிள்ளைத்தமிழ் பாடும் வழக்காறின்மையாலும், கௌரி அம்பிகையினிடம் சிறிது ஈடுபாடுடைமையாலும் "கௌரிநாயகி பிள்ளைத்தமிழ்" எனத் திருவருள் கூட்ட இதனை எழுதி முடித்தேன்.

பண்டைய பிள்ளைத்தமிழ்கள் போலாகாது அருஞ்சொற்கள் கற்பனைகளின்றிக் காலத்திற்கேற்ப எளியநடையில் எழுத எண்ணினேன். எனது நோக்கம் எவ்வளவு நிறைவெய்தியதென்பதைப் படிப்பவர் தீர்மானத்துக்கே விட்டு விடுகிறேன்.

இதனை அச்சிட்டு வெளியிட எனது பொருளாதார நிலை இடந்தராமையாற் பல ஆண்டுகள் இது வெளியிடப்படாதிருந்தது. எனது முதுமையும் நோயுடன் போராடிக் கொண்டிருந்த நிலைமையும் கண்ட எனது அருமை மாணவரிற் சிலர் என் வாழ்நாளிலேயே இதனை வெளிப்படுத்த முன்வந்தனர். அவர்களுள்ளும் வித்துவான் சி. ஆறுமுகம் அவர்கள், வித்துவான் பொன். அ. கனகசபை அவர்களின் துணையோடும் எனது மாணவ அன்பர்களின் பொருளுதவி பெற்று இப்போது அச்சேற்றி வெளிப்படுத்துகின்றனர்.

இதனை ஆக்குங்காலை பிரதிபண்ணல், ஆலோசனை கூறல் முதலிய உதவியளித்த அன்பர்களுக்கும், பொருளுதவிய பெரியோருக்கும், கௌரிநாயகி அருளால் "சகலநன்மைகளும் பெருகுக" என வாழ்த்தி என் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

"நாயேனைத் தன்னடிகள் பாடுவித்த
தாயான ஈசற்கே சென்றூதாய் கோத்தும்பி,'
கௌரிநாயகி சமேத கேதீச்சரநாதன்
திருவடி வாழ்க.

## கௌரிநாயகி பிள்ளைத்தமிழ் - அருஞ்சொற் பொருள் விளக்கம்

### 1. காப்புப் பருவம்

(குழந்தையைத் திருமால் முதலிய தெய்வங்கள் காக்கவென வேண்டல்) இது மூன்றாம் மாத நிகழ்ச்சி.)

1. திகிரி - சக்கரம்; வராகம் - பன்றி; கமடம் - ஆமை; களைகணாய் - புகலிடமாய்.

2. வாளை, சேல் - மீனினங்கள்; பூவை - நாகணவாய்; பொதும்பர் - சோலை; இஞ்சி - மதில்; ககனம் - வான்

3. குவடு - மலைச்சிகரம்; மூதாட்டி – அவ்வை; உகைக்கும் - செலுத்தும்.

4. கோமளம் - இளமையழகு.

5. துணர் - பூங்கொத்து; உம்பல் - யானை; பாகசாதனன் -இந்திரன்; கா - சோலை.

6. மலையம் - பொதியமலை; வேள் - மன்மதன்; உததி - கடல்; மின் - இலக்குமி; அம்பரத்தி - சிதாகாசரூபி.

7. ஓதிமம் - அன்னம்; உபயம் - இரண்டு; பிணை - பெண்மான்.

8. மடங்கல் - சிங்கம்; மகிடன் – மகிடாசுரன்.

9. ஆர்த்தி - ஊட்டுவித்து; உலககாரணி - பிரபஞ்சத் தோற்றத்திற்குக் காரணமானவள்.

10. இருமருத்துவர்கள் - இரண்டு கோடி அசுவினி தேவர்கள்; எண்வசுக்கள் - எட்டுக்கோடி வசுக்கள்; பதினொருவர் முக்கணுருத்திரர்- பதினொரு கோடி உருத்திரர்கள்; பன்னிருவர் உதய சூரியர்கள் - பன்னிரு கோடி சூரியர். ஆக முப்பத்து மூன்று கோடி தேவர்கள்; கோடி - முடிவு.

---------

### 2. செங்கீரைப் பருவம்

( ஒரு காலை மடக்கி மறுகாலை நீட்டி இருகையுமூன்றித் தலை நிமிர்ந்து செங்கீரையசைதல் போல முகம் அசைய ஆடல். இது ஐந்தாம் மாத நிகழ்ச்சி)

11. பை - படம்; பருதி - சூரியன்; மதி - சந்திரன்; அனல் – நெருப்பு.

12. அள்ளூற - வாயூற; வங்கம் - தோணி; வாமம் – இடப்பாகம்; மாந்தை - மாதோட்டம்.

13. மாடகம் - யாழின் முறுக்காணி; தந்தி - நரம்பு.

14. கவான் - தொடை; தீர்த்திகை - தீர்த்தம்; தேசு - ஒளி.

15. கொண்டலையுயர்த்தவன் - இந்திரன்; தனஞ்சயன் - அர்ச்சுனன்; கோல் - அம்பு; கோலம் - பன்றி.

16. கால் - காற்று; அங்கி - நெருப்பு; காயம் - ஆகாயம் முதல் எழுத்து குறைந்து நின்றது.

17. சசிகுலம் - சந்திர வமிசம்; செழியன் - மீன்கொடியோன். பாண்டியன்

18. படிறு - வஞ்சகம்

19. அகவரை - மனமாகியமலை; துவர்- பவளம்.

20. அகடு - வயிறு; சினை - கொம்பர்;

---------------------------------

**3. தாலாட்டுப் பருவம்**

(நாவசைத்துப் பாட்டுப்பாடிப் பிள்ளையைத் தாலாட்டுதல்; இது ஏழாம்மாத நிகழ்ச்சி)

21. விருது குன்ற - சம்பந்தர் செந்தமிழ் முதற்சீர்; முறை - தேவாரத் திருமுறை.

22. பள்ளை - பருத்த; திமில் - ஏரி.

23. பங்கம் - சேறு; பழனம் - வயல்; முளைச்சாலி - முளை நெல்லு; மலைமன் - மலையரசன்.

24. புனிறு - ஈன்றணிமை- இளமை; மகரம் - சுறா;

25. செயலை - அசோகு; பூகம் - கமுகு; காழிவேந்தர் - சம்பந்தர்.

26. மாதர் இளம்பிறை - அழகிய இளம்பிறை; மங்கை -கங்காதேவி.

27. மம்மர் - மயக்கம்; பரா - பாராட்டு.

28. பறந்தலை - போர்க்களம்;

30. யாமளை - பச்சைநிறமுடையாள்

---------------------------------

**4. சப்பாணிப் பருவம்**

(கைகளைச் சேர்த்துக் கொட்டுமாறு வேண்டுதல் - ஒன்பதாவது மாத நிகழ்ச்சி )

31. பூகம் – கமுகு.

32. பிரமா, விஷ்ணு, உருத்திரன், மகேசுரன், சதாசிவனாகிய பஞ்சகர்த்தாக்களுக்கும் முறையே சரஸ்வதி, இலக்குமி, உமை, மகேஸ்வரி, மனோன்மணி என்போர் சத்தி

-----------------------------

**7. அம்புலிப் பருவம்**

(அம்புலியைக் குழந்தையோடு விளையாட வருகவென அழைத்தல், பதினைந்தாம் மாத நிகழ்ச்சி)

61. ததி - தயிர்

62. சிறுவிதி - தக்கன்; பாந்தள் - பாம்பு.

63. மதனன் - மன்மதன்; செவ்வழி - ஒருபண்.

64. முளரி - தாமரை; பஸ்மீகரம் – சாம்பராதல்.

66 சுருதி - வேதம்.

67. உவா - பூரணை.

68. முந்நீர்ப்புணரி - சமுத்திரம் (இருபெயரொட்டு); தண்டலை - சோலை; பின்னம் - தாழ்வு; கறை - மறு.

69. அம்புயன் - பிரமன்; மோடு - பெருமை; எகினம் - அன்னம்.

70. நவை - குற்றம்; பானத்தம் -(பால் + நத்தம் )- வெண்சங்கு; ஆன் - எருது; நத்தி – விரும்பி;

-------------------------------------

**8. அம்மானைப் பருவம்**

(பிள்ளையைத் தோழிகள் அம்மானையாட வேண்டுவது -பதினேழாம் மாத நிகழ்ச்சி)

71. கான் - வாசனை; பிதாமகன் - பிரமன்; முத்தமிழ் விரகர் - ஞானசம்பந்தர்; ஆனாத - குறையாத.

72. நீணாகம் - நீண்டபாம்பு; கிழமை - உரிமை ( முன்னர் கேது என்னும் நாகம் பூசித்த தலமாகையால் ஏற்பட்ட உரிமை)

73. விரிபடப்பாயல் - விரிந்த படத்தையுடைய பாம்பணை; விண்ணாடு - தேவருலகம்; விண்டு - திருமால்.

74. கந்தரம் - கழுத்து; தனு - உடம்பு; கரணம் – உட்கருவி - மனம், புத்தி, சித்தம், அகங்காரம் என்பவை.

75. ஐம்புலவேடர் - ஐம்பொறிவழிப் புலன்களாகிய வேடர்; உருவகம்.

76. பரிபுரம் - சிலம்பு; குஞ்சரி – தேவயானையம்மை;

77. பெதும்பையர் - இளம் பெண்கள்; நாப்பண் - நடு; கோ - பசு.

-------------------------------

### 9. நீராடற் பருவம்

(பிள்ளையைத் தோழியர் ஆற்று நீராட வேண்டல் - பத்தொன்பதாம் மாத நிகழ்ச்சி)

81. மகரக்குழைகள் - சுறா மீன் வடிவான தோடுகள்; அலங்கல் - மாலை.

82. ஏல - ஒப்ப; உழுமள்ளர் - உழவர் ( வினைத்தொகை) கரவு - வஞ்சகம்.

83. செஞ்சடாடவி -சிவந்த சடையாகிய காடு; செம்மாந்து - இறுமாந்து; மாடு – பக்கம்;

84. மலயம் - பொதியமலை; உலவ - நீங்க.

85. பிரிந்தென்ன - விட்டு விலகினாற் போல; மதுகரம் - வண்டு; நந்து - சங்கு.

86. வீட்டி - ஒழித்து.

88. நாலுமறை நாலுமுந்தி - நான்கு வேதங்களை ஓதும்பிரமன் தோன்றும் விட்டுணுவின் உந்திக்கமலம். வெள்ளைவிடை - விட்டுணுவாகிய இடபம். நரைவெள்ளேறு - தேவாரம்.

89. அலைமென்கரத்தில் - பாலாவியின் அலையாகிய மென்மையான கையில்; அம்புயத் தினலர்கண்ணி நீலமலரின் - தாமரை மலர்போலலர்ந்த கண்போன்ற நீலமலரையும்;
அணிபுன் சிரிப்பிலமை முத்தினம் - அழகிய சிறுநகை போலமைந்த முத்துக்களையும்: பச்சை வண்ணவுரு - பச்சை நிறமேனிப்படிவம்; புள்ளின் ஒலிவாக்கில் - பறவைகளின் ஒலியாகிய வாக்கையும்; அன்னை நினையொத்து - தாயே உன்னை ஒப்பாக; சண்பைமன்னன் - சம்பந்தன்.

90. கன்னல் - கரும்பு; ஐயர் எழுதச் சிறந்த தமிழ் - சிற்றம்பலவர் திருக்கரத்தால் எழுதுஞ் சிறப்பமைந்த திருவாசகம்.

-----------------------------------

### 10. ஊசற் பருவம்

(தோழியர் பிள்ளையை ஊஞ்சலில் ஏற்றி வைத்து ஆடும்படி வேண்டல் - இருபத்தோராவது மாதத்தில் நிகழ்வது.)

91. நிகமம் - வேதம்; நிகமங்கால் - வேதங்கள் கால்களாக; ஆகமம் விட்டமதாய் - ஆகமங்கள் விட்டமாக.

92. அலங்கல் முத்து - மாலையிலிலங்கும் முத்து; வம்பர் - வாசனை பொருந்திய; உம்பர் -தேவர்.

93. கவி - கணிகண்ணன்; மாலோன் - விட்டுணு.

95. ஏமம் - பொன்; தமனியம் - பொன்; பூந்தராய் வேந்தர் - சம்பந்தர்.

97. மகவான் - இந்திரன்; ஐந்தரு - கற்பகம் முதலிய ஐவகை மரங்கள்; கொண்டல் - முகில்.

98. நாண்மலர் - புதியமலர்; நளினம் - தாமரை.

--------------------------------------

## அநுபந்தம்: : பேராசிரியர் வாழ்வும் வளமும்

சிதம்பரத்திலே திருக்குளம் தொட்ட நல்லூர் ஞானப் பிரகாசசுவாமிகள் மரபிலே அவதரித்தவர் நாவலர்பெருமான். சுன்னாகம் குமாரசாமிப் புலவர் நாவலரையாவின் மாணவர். அவரிடம் கல்விபயின்று சீலம் நிரம்பியவர்களுள் இருவர் இப்பொழுதும் கற்றோர் மனத்துட் களிக்கும் குருமணிகளாகப் புகழுடன் வாழ்ந்து கொண்டிருக்கின்றனர். ஒருவர் திருநெல்வேலி ஆசிரிய கலாசாலைப் பேராசிரியராக இருந்தவரும், சான்றோருமாகிய பண்டிதமணி அவர்கள். மற்றவர் ஈழத்திலெடுத்த சிலப்பதிகார விழாவில் “பேராசிரியர்" எனப்பட்டமளித்து பாராட்டப்பட்ட பெருந்தகையாவர்.

இவர் தமது இருபத்துநான்காம் வயதில் கோலாலம்பூர், விவேகானந்தா வித்தியாலய நிருவாகத்தின் அழைப்பின் பேரில் மலாயா சென்று நாலரை ஆண்டுகள் தமிழ்த் தொண்டு புரிந்தவர். மாந்தருள் மாணிக்கமான காந்தியாரின் கொள்கைகளைப் பின்பற்றி ஒழுகுபவர். ஆங்கில அறிவும் சமய சமரச நோக்குமுள்ளவர். மாணவர்கள் பண்புடன் வாழ நீண்ட நாட்கள் ஆசிரியத்தொழில் புரிந்த எங்களாசிரியர் தமது முப்பத்திரண்டாம் வயதில் அருமைத்தாயாரின் கிட்டிய சொந்தமான முத்துக்குமாரு அவர்களின் மகள் தங்கம்மாவை மணந்தவர்; சிவசுப்பிரமணியம், சிவகாமசுந்தரி, பாலசுப்பிரமணியம் எனப் பெயரிய மக்களைப் பெற்றவர்; சமநிலையுள்ளம் படைத்த தெளிவுக்காட்சியர்.

இவருக்கு வைத்தியர் கனகசபை அவர்கள் (பேரனார்) ஆரம்பகால ஆசிரியராக வாய்த்திருந்தார். இளங்காலக் கல்வியைத் தாயகத்தில் கற்றுத் தேறியவர். தமது பதினேழாம் வயதில் பயிற்றப்படாத ஆசிரியத் தகமைப் பரீட்சையில் சித்தியெய்தினார். அப்பொழுது சைவாசிரிய கலாசாலைகள் இருக்கவில்லை. தெல்லிப்பழையிலிருந்த

மிசன் ஆசிரிய கலாசாலைப் புகுமுகத் தேர்வில் சித்தியெய்தியும் கிறிஸ்தவராகச் சேர விரும்பாமையால் அச்சந்தர்ப்பத்தை இழந்தார். இவரது தொடர்ந்த ஊக்கத்தினாலேயே கோப்பாய் ஆசிரியப் பயிற்சிக் கலாசாலை ஆரம்பமானது.

சைவபரிபாலன சபைப் பிரசாரகராய் இருந்தவரும் நகுலாசல புராண ஆசிரியரும், புலவருமாகிய மாதகல் ஏரம்பையரிடம் கீரிமலையிலிருந்து கல்வி பயின்றவர். அக்காலத் தில் இவருக்கு கல்லடி வேலனாரின் நட்பும் வாய்த்திருந்தது. வித்துவசிரோன்மணி கணேசையா அவர்களுடன் நயினையம்பதியில் ஆசிரியராகவும் இருந்தவர். உடன்பிறந்த சோதரர் சித்தாந்தச் செம்மல் கணபதிப்பிள்ளை வைத்தியர் அவர்களும் தேசத்தொண்டரும் உத்தமருமாகிய பசுபதிப்பிள்ளை (பரமசிவம்) அவர்களும் இவரது வழிகாட்டிகளாவர்.

சைவ வேளாள பரம்பரையிலே வந்த சின்னையா அவர்களே இவரின் தந்தையார். தாயார் செம்மனச்செல்வி வள்ளியம்மை அவர்கள். சதாசிவம்பிள்ளை என்பது தாய் தந்தையர் இட்ட பெயர். ஊரார் இளையப்பா என்னுஞ் செல்லப் பெயரால் அழைப்பர். இவருடைய அருமைத் தம்பி அமரர் கதிர்காமபிள்ளையவர்களுஞ் சிறந்த பண்பாளர்.

நடேசர் கிள்ளை விடுதூது, கணேசவித்தியாலய வரன் முறை, கேதீச்சர நாதர் கிள்ளை விடு தூது, மீனாட்சி சுந்தரேசர் திருவூஞ்சல், என்னும் நூல்களை இயற்றிப் பாராட்டுப் பெற்ற இவர் இப்பொழுது திருக்கேதீச்சரத்துக் கௌரிநாயகி பிள்ளைத்தமிழ் என்னும் அரிய நூலையும் பாடியுள்ளார்.

சிங்கப்பூரிலிருந்து தாயகம் திரும்பி கணேச வித்தியாலயத்திற்கு ஆசிரியரானார். வந்த தொடக்கத்திலேயே பாரதியாரின் தேசியப் பாடல்களை மாணவர் ஆசிரியர் மத்தியில் பாடிக் காட்டி விளக்கி வந்தவர். சிங்க நடை, எடுப்பான நெஞ்சம், ஒரே பார்வையில் முந்நூறு மாணவர்களையும் பார்க்கும் தெளிந்த கண்கள், தோளோடு வட்டித்து உறவாடும் கேசங்கள் அத்தனையுஞ் சேர்ந்து கதருடை தரித்து ஆசானுபாகுவெனுந் தோற்றப் பொலிவுடன் காட்சி தந்து கொண்டிருப்பார்.

> “கனைகடல் தண்சேர்ப்ப கற்றறிந்தார்
> கேண்மை நுனியில் கரும்பு தின்றற்றே"

என்ற நாலடியாரின் அருமந்த செய்யுளுக்கு அப்படியே அமைந்த உவமையாளர். இப்பிறப்பிலே நல்லாசிரியராகப் பிறந்து விட்ட இவரிடம் கற்ற மாணவர்கள்

பணத்திலும் பண்பு இனிதென்ற கொள்கையினர். வருங்கால இளம் சமுதாயம் நம் பேராசிரியரது இலட்சியங்களைப் பின்பற்றுவதாக.

"ஜனகாபுரி", ஜெயந்திநகர்
கிளிநொச்சி , 1-3-76 மு. ஆறுமுகன்

----------------------------------

## ஆராய்ச்சி

இலங்கையிலுள்ள திருக்கேதீச்சரத்தில் எழுந்தருளியிருக்கும் கௌரியம்பிகையைக் குழந்தையாகக் கொண்டு அவர்மீது பாடப்பெற்ற துதிநூல் கௌரிநாயகி பிள்ளைத்தமிழ். பருவந்தோறுமுள்ள பாட்டுக்கள் வேறுபட்ட சீர்களையும், வெவ்வேறு சந்தங்களையுங் கொண்டன; ஆற்றொழுக்குப் போன்ற ஓசையுடையன. இந்நூலில் 103 பாட்டுக்கள் உண்டு. அவற்றில் ஒன்று வெண்பா; ஏனையவை விருத்தப்பாவினத்தைச் சேர்ந்தன.

"பாழ்த்த பிறப்பறுத்திடுவான் யானுமுன்னைப்பரவுவனே" என்ற திருவாசக மணி ஓசை, பிள்ளைத்தமிழ்க் கோவிலில் பிரார்த்தனையின் பொழுது கேட்கின்றது. மீளப் பிறவா நிலையாகிய சாக்கிராதீத நிலையை "என்னையினி அன்னையர் அகடுற விட்டாட்டாது அபயம் அளித்து அடிதர" (செங்.10) என்பது போன்ற பகுதிகள் விளக்கமாகக் காட்டுகின்றன. இவற்றிலிருந்து இப்பிள்ளைப்பாட்டு வீடுபேற்றைக் கருதியே பாடப்பெற்றதென்பது வெளிப்படையாகின்றது. அயரா அன்பின் அரன் கழல் போற்றியவராதலின், மலரிலும் வேதசிரசிலும் அன்பாளர் கண்ணிலுங் கருத்திலும் நடமாடும் அன்னையே, "என் நெஞ்சிலும் மிதித்தாடவல்லையோ" (அம்.2) என்று ஏங்குகின்றார். "மனமலையில் மிதித்திடின் மலரடி வருந்திடுமோ" (செங். 9) எனத் துடிக்கின்றார். "அரஅர ஒலியொடு கௌரி இளங்கொடி ஆடுக பொன்னூசல்" எனப் பிள்ளைத்தமிழ் இறுதிப் பருவம் சைவாசார மரபு போற்றி மங்களகரமாகப் பூர்த்தி செய்யப்பட்டிருக்கின்றது.

கற்பனையழகுக்கே அழகு செய்வனவாக அணிகள் விளங்குகின்றன. அன்பர்களுக்கு இன்பந்தரும் இறைவிகௌரி என்னுமோர் கரும்பு (காப்.10) என உருவகிக்கப்பட்டுள்ளார். எம்பிராட்டி உருவம் முழுவதும் இனிக்கும் கரும்பாகவே

கவிஞரால் உருவகம் செய்யப்பட்டுள்ளது. முக்கட்செங்கரும்பான கேதீசருக்கே தித்திக்குங் கட்டிக்கரும்பன்றோ கௌரிநாயகி. சங்ககாலப் புலவர்களைப் போன்று இப்புலவரும் இயற்கையிலுள்ள எழில் நலன்களை இயற்கை நவிற்சியணிபெற அமைத்துக் காட்டியுள்ளார்.

இந்நூலிற் சைவசித்தாந்த உண்மை இலகுவாக விளக்கப்பட்டிருக்கின்றது. 'சொற்பதமெலாங் கடந்து அருவாகி நின்ற பொருள் சோதிபெறும் உருவமாகி' (சப். 3) எனப்பதியின் சொரூப தடத்தங்கள் காட்டப்படுகின்றன. வஞ்சர் ஐம்புல வேடர் மாயை வலையிற்சிக்கி, வாழு நெறியறியாது, சஞ்சலங் கொண்டுலவும் உயிர், (அம். 10) என்ற பகுதியில் பசுவின் இலக்கணம் கூறப்படுகின்றது. காருற்ற ஆணவங் கன்ம மாயைகள் (அம். 5) எனப் பாசங்கள் விரிக்கப்படுகின்றன. 'பரமசிவன் அருளுருவில் வருகௌரி' (நீரா. 3) நாயகியே * உயிர்களில் தயை கொண்டு சற்குருவின் உருவு கொண்டு ' (அம். 10) வருகின்றாள். 'மன்னும் ஐம்பூதத்தின் உடலல்லை திருவைந்தெழுத்தோதி வாழ்கென்று’ (சப். 10) தம் முதல் குருவாய் வந்து உணர்த்துகின்றது. குருவின் உபதேசம் கேட்டு, சிந்தித்து, தெளிந்து பாசஞான பசுஞானங்கள் நீங்கப்பெற்ற உயிர், இருள்கடிந்தொளிரும் உதயசூரியன் என்ன மாசில் மெய்ஞ்ஞானம் (செங். 7) விளங்கித் தோன்றப் பெறும்; முப்பாழும் அற்று பசுகரணமற்று சிவகரணமுற்றுச் சிவஞானத்தால் 'நிர்க்குணானந்த பரவெளியிலே நானற்ற நின்மலசுகம்' (அம். 6) பெறும்; துரியங்கடந்த சிவபோகந் துய்த்து (வரு. 10) பேரின்பப் பெருவாழ்வடையும்.

மகாமந்திரமான ஓங்காரத்தில் இருந்தே இந்நூல் உதயமாகியது. இந்நூலிலுள்ள எழுத்துக்கள் திருவைந்தெழுத்தைக் குறிப்பன. சொற்கள் பக்திச்சுவை சொட்டுவன. இந்நூற்பொருள் செம்பொருளைப் பற்றியது. பொருளுணர்ந்து இந்நூலைக் கற்பவர் தமிழின்பம் நுகர்வர். கௌரிநாயகி என்னும் தெய்வக் குழந்தையை ஞானக்கண்ணால் கண்டு ஐம்புலப் பேரின்ப அநுபவமுறுவர். திருக்கேதீஸ்வரத்தில் பாம்பும் மயிலும் பகை மறந்து இன்புற்று வாழ்வது போல் வாழ்ந்து பிறவிப் பேறடைவர். கௌரிநாயகி பிள்ளைத்தமிழ் எல்லோர்க்கும் இன்பந் தந்து ஆசிரியரின் நல்லியல்புகளை அகில உலகம் முழுவதும் பரப்பி நீடுநின்று நிலவ எல்லாம் வல்ல கௌரி பங்க கேதீச்சரநாதர் திருவருள் பாலிப்பாராக.

“தமிழகம்" பொன். அ. கனகசபை

30-2-76 புங்குடுதீவு

